DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.277/2022**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சேது |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.02.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் வாடிநன்னியூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி என் மைத்துனர். கடந்த 05.06.2022 ம் தேதி மாலை 5 மணிக்கு வீட்டில் இருந்தபோது எதிரி என்னை பேசினார் நான் ஏன் பேசுகிறாய் என்று கேட்டபோது எதிரி அருவாளை எடுத்து வந்து என்னை இடது பக்க மார்பில் வெட்டினார். பின்பு என்னை சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் சிகிச்கையில் இருந்தபோது போலீசார் வந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் என்ன விபரங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(மேற்படி புகாரில் உள்ள கையொப்பம் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் எதிரியை களைக்கொட்டால் அடித்தேன் என்றால் இல்லை, அவன்தான் என்னை அடித்தான். நான் எதிரியை கட்டையால் தட்டினேன். எதிரியை சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். எதிரியால் எனக்கு நெஞ்சுப்பகுதியில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் காயம் ஏற்பட்டதாக காண்பிக்கும் பகுதி வயிற்றுப்பகுதி என்றால், நெஞ்சுக்கு கீழ் என்று சாட்சி காயம் ஏற்பட்ட இடத்தை காண்பிக்கிறார். எதிரி என்னை அருவாளலால் வெட்டவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வெட்ட பயன்படுத்தியதாக சொல்லப்படும் அருவாளை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.